சூன் - 2013

திருவள்ளுவர் ஆண்டு 2044

# செந்தமிழ்

தொகுதி : 57
பகுதி : 8

விலை ரூ. 10/-

## திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச் சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு

# நன்றி ! நன்றி ! நன்றி !

## மதுரைத் தமிழ்ச்சங்கம், செந்தமிழ்க் கல்லூரியில் உதவிப் பேராசிரியர்கள் மற்றும் நூலகர் நியமனம்

செந்தமிழ்க் கல்லூரியில் காலியாக உள்ள ஒன்பது உதவிப் பேராசிரியர் மற்றும் ஒரு நூலகர் பணியிடங்களை நிரப்பிக்கொள்ள அரசின் அனுமதி வந்தவுடன், இதுதொடர்பாக முடிவெடுக்க கல்லூரியின் முகமையான தமிழ்ச் சங்க ஆட்சிக்குழுக் கூட்டம் 11.12.2012ம் நாளன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் சங்கத் தலைவர், துணைத் தலைவர் உட்பட 11 உறுப்பினர்கள் பங்கேற்றனர். நியமனம் குறித்த பொருள் விவாதிக்கப்பட்டு நியமனம் தொடர்பான பணிகளை மேற்கொள்ள 3 உறுப்பினர்கள் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவினர் கல்லூரிச் செயலாளர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தனது பணியைச் சிறப்பாகச் செய்தார்கள். அரசு விதிகளின்படி அனைத்து நடவடிக்கைகளும் முறையாக எடுக்கப்பட்டு 02.04.13 மற்றும் 03.04.13 ஆகிய நாட்களில் நேர்முகத் தேர்வு நடத்த முடிவு செய்யப்பட்டது. இந்நிலையில் கல்லூரிக்குழு உறுப்பினர் லட்சுமி நாச்சியார், கல்லூரிக்குழுவைக் கூட்டாமல், செயலாளர் தன்னிச்சையாகச் செயல்படுவதாகக் கூறி சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மனு தாக்கல் செய்து நேர்முகத் தேர்விற்கு இடைக்காலத் தடையுத்தரவு பெற்றதால் நேர்முகத் தேர்வு நிறுத்தப்பட்டது.

பின்னர் கல்லூரி நிர்வாகத்தால் உயர்நீதிமன்றத்தில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது. மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதியரசர் அவர்களின் அறிவுரையின்படி கல்லூரிக்குழு கூட்டப் பெற்று, உதவிப் பேராசிரியர், நூலகர் பணியிடங்களை நிரப்பத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க கல்லூரிச் செயலாளருக்கு அதிகாரம் வழங்கி பெரும்பான்மை உறுப்பினர்களால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தின் நகல் மாண்புமிகு நீதியரசர் முன் தாக்கல் செய்யப்பட்டது. உடனடியாக இதனை ஏற்றுக் கொண்டு, நியமனம் தொடர்பாக செயலாளர் புதிதாக அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ள வேண்டுமென நீதியரசர் தீர்ப்பளித்தார். நீதிமன்றத் தீர்ப்பின்படி நியமனம் தொடர்பாக புதிதாக மீண்டும் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு, 27.05.13 மற்றும் 28.05.13 அன்று நேர்முகத் தேர்வு நடத்த முடிவு செய்யப்பட்டது.

நேர்முகத் தேர்வு அன்று சங்கத் தலைவர் குமரன் சேதுபதி, துணைத் தலைவர் லட்சுமி நாச்சியார் மற்றும் 50 நபர்களுடன் வளாகத்திற்குள் வந்து நேர்முகத் தேர்வை நடத்துவதற்கு இடையூறு ஏற்படுத்தினார்கள். ஆனால் காவல்துறை அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி முடிவுக்குக் கொண்டுவந்தனர்.

பின்னர் உயர்நீதிமன்ற உத்தரவுப்படி நல்ல முறையில் நேர்முகத் தேர்வு நடைபெற்றது. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தால் அமைக்கப்பட்ட தேர்வுக்குழுவால் தேர்வு செய்யப்பட்ட ஒன்பது உதவிப் பேராசிரியர்கள் மற்றும் ஒரு நூலகர் ஆகியோர் 29.05.2013ம் நாள் முற்பகல் முதல் பணியேற்புச் செய்து பாரம்பரியமிக்க செந்தமிழ்க் கல்லூரியில் பணிபுரிந்து வருகின்றனர்.

மேற்படி உதவிப் பேராசிரியர்கள் மற்றும் நூலகர் காலிப்பணியிடங்களை நிரப்பிக்கொள்ள அனுமதி அளித்த **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா** அவர்களுக்கும், **மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் எஸ். பழனியப்பன்** அவர்களுக்கும் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர், கல்லூரிக் கல்வி இயக்குநர் மற்றும் கல்லூரிக் கல்வி இணைஇயக்குநர் ஆகியோருக்கும் நிர்வாகத்தின் சார்பாக எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**( இரா.குருசாமி )**
செயலாளர்

# செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 57 திங்கள் இதழ்

பகுதி : 8 திருவள்ளுவர் ஆண்டு 2044

சூன் 2013




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


**ஆசிரியர்**

**இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,**

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| கம்பராமாயணத்தில் அறிவியல் சார்ந்த கருத்துகள் | முனைவர் ச. கவிதா | 4 |
| பண்பாட்டு விழுமியங்கள் | ஜெ. ஜெயமதி | 10 |
| திருக்குறளில் செவ்வியல் கூறுகள் | முனைவர் மு. மீனா | 18 |
| புதுக் கவிதையா? மரபுக் கவிதையா? | கவிவேந்தர் கா. வேழவேந்தன் | 30 |
| குறள் காட்டும் அறம் | சா. ரோஸ்லின் சில்வா | 31 |
| சோறும் சேறும் ! | புலவர் சீ. பாண்டுரங்கன் | 34 |
| கலம்பகப் பாடுபொருள் | க. தங்கதுரை | 35 |

# இதழ் மணம்

பேரன்புடையீர், வணக்கம் !

நலமே நாளும் நிறைக. 2013-14 கல்வியாண்டு தொடங்கியுள்ள நிலையில் ஜூன் மாதச் செந்தமிழ் இதழ் தங்கள் கைகளில் தவழ்கிறது.

மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்தும் செந்தமிழ்க் கல்லூரியில் பத்துப் புதிய பேராசிரியர்கள் முறையான கல்வித் தகுதியோடு முனைவர் பட்டம் பெற்றும் விரிவுரையாளர்களுக்கான கல்வித் தகுதித் தேர்வில் வெற்றி பெற்றும், தகுதி மிகுதியும் மிக்கவர்களின் நேர்முகத் தேர்வில் தங்கள் தகுதியையும் திறமையையும் நிரூபித்தும் பேராசிரியர்களாகப் பொறுப்பேற்றுள்ளனர். அவர்கள் அர்ப்பணிப்புணர்வோடு பணியாற்றி தமிழுக்குத் தொண்டு செய்ய செந்தமிழ் இதழ் பாராட்டுகிறது.

இம்மாத இதழில் ஐம்பெரும் பேராசிரியர்களின் ஆய்வுக் கட்டுரைகளோடு கவிவேந்தர் வேழவேந்தன், புலவர் பாண்டுரங்கன் அவர்களின் மரபுக் கவிதைகளும் வாசகர்களுக்கு விருந்தாகப் படைக்கப் பெற்றுள்ளன.

உலக வெப்பமயமாதல் என நாம் இன்று காணும் அறிவுப் பூர்வமான கருத்தைக் கம்பர் தன் கவிதைகளில் புலப்படுத்தியிருப்பதை முனைவர் மெ. மெய்யப்பன் அவர்களும் தமிழனின் பண்பாட்டு விழுமியங்களை ஜெ. ஜெயமதி அவர்களும் தேர்ந்து தெளிவாக்கியுள்ளனர். திருக்குறளில் செவ்வியல் கூறுகள் பற்றி முனைவர் மு. மீனா அவர்கள் நுண்மான் நுழைபுலத்தோடு நுணுகி ஆராய்ந்து தந்திருப்பது பாராட்டிற்குரியது. குறள் காட்டும் அறத்தை சா. ரோஸ்லின் சில்வாவும், கலம்பகப் பாடுபொருளை க. தங்கத்துரையும் செந்தமிழ் இதழுக்குத் தந்து சிறப்பித்துள்ளனர்.

விளம்பரமும் வியாபாரமுமின்றி தமிழுக்காக மட்டும் தன்னை அர்ப்பணித்து கொண்டிருக்கும் செந்தமிழ்க் கல்லூரியும் மதுரை நான்காம் தமிழ்ச்சங்கமும் நடத்தும் ஒரே இதழ் செந்தமிழ் இதழ் மட்டுமே என்பதை நினைவூட்டுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

**முனைவர் க. சின்னப்பா**

**இனி நீங்களும் இதழும்....**

# கம்பராமாயணத்தில் அறிவியல் சார்ந்த கருத்துகள்

முனைவர் மெ. மெய்யப்பன்
காரைக்குடி

## முன்னுரை

ஒரு காலத்தில் இலக்கிய ஆராய்ச்சி என்பது படைப்புகளில் ஆசிரியர் கூறியிருக்கும் சமூக சமுதாயக் கருத்துகளைப் பற்றியதாக இருந்தது. பின்னர் வழக்கமான மொழியியல் அக மற்றும் புற மரபுகள், சொல்லாக்கங்கள், பழமொழிகள் போன்ற ஆய்வுகளிலிருந்து வேறுபட்டு படைப்புகளின் ஒப்பீடுகள், சீர்திருத்தக் கருத்துகளின் எழுச்சியும் சமுதாய மாற்றங்களும், பாத்திரப் படைப்புகளின் உருவாக்கமும் குணச்சித்திரங்களும், ஒரே ஆசிரியரின் படைப்புகளில் காணப்படும் பாத்திரப் படைப்புகளும் ஆசிரியரின் சிந்தனைப் போக்கும் என்று பலவாறு விரிவடைந்து வளர்ந்தது. அறிவியல் தமிழின் அவசியத்தை உணர்ந்த சிலர் இலக்கியப் படைப்புகளில் காணப்படும் அறிவியல் சார்ந்த கருத்துக்களைச் சுட்டிக்காட்டி அவை எடுத்தாளப்பட்டிருக்கும் விதத்தால் படைப்பாளியின் அறிவியல் திறத்தைப் புலப்படுத்தி இலக்கியத்திற்கும், அறிவியலுக்கும் ஒரே மூலமாக இருப்பது இயற்கையே என்று நிறுவி வருகின்றார்கள். பழந்தமிழ் சொற்களை மீட்டுருவாக்கம் செய்து அறிவியலுக்குப் பல புதிய கலைச் சொற்களைப் பெற இத்தகைய ஆய்வுகள் பயன் தருகின்றன. மொழி ஒரு புதிய பரிமாணத்தைப் பெறுவதால் மொழியின் வளர்ச்சி மக்களிடையே தூண்டப்படுகின்றது.

பிற தமிழ் இலக்கியங்கள் போல் கம்ப ராமாயணத்திலும் அறிவியல் கருத்துக்கள் ஆங்காங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. இயற்கையைக் கண்டுகளித்து புரிந்து கொண்ட கம்பரின் அனுபவங்களே அவருடைய படைப்பான இராமாயணத்தில் எங்கும் காணப்படுகின்றன. அவை இக்கால அறிவியலுடன் ஒத்துப் போவதைக் காணும் போது பெரும் வியப்பே மேலிடுகின்றது. ஒரு சிலவற்றை இடமும் இனமுமறிந்து எடுத்துக்காட்டுவது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## இலக்கியமும் அறிவியலும்

ஆற்றலும் பொருளும் ஒரே மூலத்தின் இருவேறு நிலைகள் என்பதைப் போல அறிவியலும் இலக்கியமும் இயற்கையை விவரிக்கின்ற இருவேறு தோற்றங்களே. புரிந்து இயற்கையைப் போல செய்து காட்டுவது அறிவியல், வியந்து இயற்கையை வார்த்தைகளால் விவரிப்பது இலக்கியம். இலக்கியமும் அறிவியலும் ஒன்றுக்கொன்று நெருக்கமான தொடர்புடையன என்பதை அறிவியலாளர்களே கூறுவார்கள்.

இலக்கியத்தில் விருப்பமில்லாத டிராக் (P.A.M.Dirac) என்ற இயற்பியல் விஞ்ஞானி ஒரு சமயம் கவிதை புனையும் இராபர்ட் ஓபன் ஹைமர் (Robert Oppenheimer) என்ற விஞ்ஞானியிடம் கவிதைக்கும் அறிவியலுக்கும் உள்ள தொடர்பைப் பற்றிக் கேட்க, இவையிரண்டும் ஒரே மூலத்தின் இரு வேறு தோற்றங்கள் என்றும் மனிதர்களின் கற்பனையாலும் அணுகுமுறையாலும் மாறுபட்ட இவையிரண்டுழ் ஒன்றுக்கொன்று எதிரும்புதிருமானது என்பதைத் தவிர வேறு வித்தியாசமில்லை என்றும் அதற்கு விளக்கம் கூறினார். இயற்கையில் காணமுடியாது புதைந்து கிடக்கும் உண்மைகளைத் தோண்டி எடுத்து மறைக்காமல் புரியாததைப் புரியும்படி கூறுவது அறிவியல், கண்ணால் கண்டு மகிழ்ந்த காட்சிகளை எண்ணத்தில் புதைத்து மறைத்துவிட்டு புரிந்ததைப் புரியாதபடி கூறுவது கவிதை என்பதால் இலக்கியத்தையும் அறிவியலையும் அப்படி விவரித்தார் போலும்.

## கம்பரின் அறிவியல் சிந்தனைகள்

### உலக வெப்பமயமாதல்

இன்றைக்கு நம்மைத் தொடர்ந்து அச்சுறுத்திக் கொண்டிருக்கும் ஒரு பொதுச் சிக்கல் உலக வெப்பமயமாதல் (Global Warming) பாதிப்பு தீவிரமான பின் இது பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே வெகுவாகத் தூண்டப்பட்டு வருகிறது. பசுமையக விளைவின் (Greenhouse effect) காரணமாக, உலகின் சராசரி வெப்பநிலை 57.2° F(14°C) விருந்து 58° F (14.5°C) வரை உயர்ந்திருக்கிறது. இதற்குக் காரணம் சூரிய வெப்பம் பூமியில் கூடுதலாக, கூடுதலாக உள்ளுறைவதேயாகும் என்றும் அப்படி உள்ளுறைவதற்குப் பூகோளத்தின் சமநிலையில் மனிதர்கள் அச்சமின்றி தொடர்ந்து ஏற்படுத்தி வரும் சீர்குலைவுகளே என்றும் ஆய்வாளர்கள் 1980களில் கண்டறிந்தனர்.

இதுபற்றி கம்பர் தாடகை வதைப் படலத்தில் ஓரிடத்தில் குறிப்புணர்த்தியுள்ளார். மருத நிலத்தில் வளம் நிறைந்த வனம் மிகவும் குளிர்ச்சியாக இருந்தது என்றும் அங்குள்ள மரங்களும் உயிரினங்களும் கொடிய மனமுடைய தாடகையால் அழிவுற அப்பகுதி வெப்பமிக்க காடாக மாறியது என்றும் கம்பர் கூறியுள்ள கருத்தில் அவரின் அறிவியல் சிந்தனை வெளிப்பட்டுத் தெரிகிறது. இதன் வழி அவரே உலக வெப்பமயமாதலை உலகோர்க்கு முதன் முதலாய் குறிப்புணர்த்தியவர் என்றே சொல்லத் தோன்றுகிறது. காடு அழிந்து வளமிழந்தது என்று பொதுவாகச் சொல்லாமல் மரங்கள் அழிவதால் காட்டின் வெப்பம் மிகுந்தது என்று குறிப்பிட்டுச் சொல்லியிருப்பதிலிருந்து கம்பர் ஓர் அறிவியல் முன்னோடியாகத் திகழ்கின்றார். காட்டின் அழிவும் நிலத்தின் வெப்பமிகுதலும் தொடர்புடையன என்ற கம்பர் கருத்து 1980களில் சுற்றுச் சூழலியல் ஆராய்ச்சியாளர்களால் கண்டறிந்த உண்மைக்கு ஏற்ப இருக்கிறது. இச்சிக்கலுக்குச் சரியான தீர்வு காண்பதில் குழப்ப நிலையே இன்றைக்கும் நீடித்து வருகின்றது. சிக்கலைச் சொன்ன கம்பர் அதற்குத் தீர்வையும் உடன் சொல்லியிருக்கின்றார். மன்னுயிர் அனைத்தையும் அழிக்கும் இப்போக்கிற்கு மூல காரணமாக விளங்கும் தீயவர்களை அவர்கள் பெண்ணென்றாலும் அல்லது யாராக இருப்பினும் அரக்கர்கள் எனக் கொண்டு அழித்து விட வேண்டும் என்று கூறி உலக வெப்பமயமாதலுக்குத் தீர்வு சொன்ன முதல்வரும் கம்பர் தானோ என்று வியக்கத் தோன்றுகிறது. தனி மனிதனின் தவறுகள் சமுதாயம் முழுவதையும் பாதிப்பிற்கு உள்ளாக்கும் போது அதைக் கட்டுப்படுத்த மூல காரணமான குற்றவாளிகளை அளிப்பதே தர்மம் என்ற செய்தியை கம்பர் இதன் வழி தெரிவிக்கின்றார்.

## உந்தம் மாறாக் கோட்பாடு

தாடகை வதைப் படலத்தில் தாடகை அங்கிருக்கும் மரங்களைப் பிடுங்கி எடுத்தும், பாறாங்கற்களை புரட்டி எடுத்தும் இராமன் மீது எறிய மிகவும் விரைந்த வேகத்தில் செல்லும் அம்புகளை எய்து அவற்றையெல்லாம் தவிடு பொடியாக்கினான். இதை,

**கல்லின் மாரியைக் கைவகுத்தாள்; அது**
**வில்லின் மாரியின், வீரன் விலக்கினான்**

என்று வர்ணித்த கம்பர் அம்பின் வேகத்தை தவறாமல் குறிப்பிடுகின்றார். அதன் கடிய வேகத்தை சொல்லொக்கும் கடிய வேகச் சுடு சரம் என்று ஏவுகணை அறிவியலார் போலத் தெரிவிக்கின்றார். இலக்கின் தன்மைக்கேற்ப ஏவுகணைகள் இருக்க வேண்டும் என்ற அடிப்படை தெரியாவிட்டால் ஒருவரால் இப்படி எய்த அம்பிற்கு வர்ணனை கொடுக்க முடியாது.

ஒரு சிறிய அம்பால் எங்ஙனம் ஒரு மரத்தையும், பாறாங்கல்லையும் பிளந்து நொறுக்க முடியும் என்ற ஐயப்பாடு அறிவியல் கற்றோருக்கும் வருவதுண்டு. வெறும் கற்பனை என்று சொல்லி நம்ப மறுப்பார்கள். ஆனால் இது அறிவியலில் சாத்தியமே என்பது ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் சார்பியல் கொள்கை (Theory of Relativity) இன்றைக்குத் தெரிவித்திருக்கின்றது. ஏறக்குறைய ஒளியின் வேகத்தில் இயக்கிச் செல்லும் ஒரு சிறிய நூல், அது பெற்றிருக்கும் உயரளவு உந்தத்தால் ஒரு தடித்த மரத்தைக் கூட ஒரு கத்தி வெண்ணையை வெட்டுவதைப் போல வெட்டிச் சாய்த்து விடும் என்பது உந்தம் மாறாக் கோட்பாட்டு விதி (Conservation of momentum).... அம்பு சிறியதே ஆனாலும் அதை விரைந்து செலுத்த, வேகம் காரணமாக அது பெறும் கூடுதல் உந்தம் அதற்கு மிகுந்த வலிமையைத் தருகின்றது. இத்தகைய அம்பு தன்னைக் காட்டிலும் உருவத்தால் பெரிய நிறையால் கனமான ஏவப்பட்ட பொருட்களை அந்தரத்திலேயே இரு கூறாகப் பிளந்து அழித்துவிடும். இந்த அறிவியல் உண்மையைத் தெரிந்து வைத்திருந்ததால் தான் கம்பர், இராமன் தன் அம்புகளைக் கடிய வேகத்தில் செலுத்தி வெற்றி கொண்டான் என்று எழுதினார் போலும்.

ஆரணிய காண்டத்தில் விராதன் வதைப் படலத்திலும் கரன் வதைப் படலத்திலும் யுத்த காண்டத்தில் பல விடங்களிலும் மெல்லிய அம்பினை கூடிய வேகத்தில் செலுத்தி போதிய ஆற்றலூட்டி தன்மீது எறியப்படும் நிறை மிக்க மரத்தையும் பாறைகளையும் தடுத்து இராமன் தற்காத்துக் கொள்கின்றான். யுத்த காண்டத்திலும் இந்த போர் உத்திகள் பலவிடங்களில் சொல்லப்பட்டுள்ளது. இவையாவும் கம்பரின் நுண்ணிய அறிவியல் திறமைகளை எடுத்தியம்புவதாக இருக்கின்றன.

## பரிணாமக் கொள்கை

மாரீசன் வதைப் படலத்தில், பிற்காலத்தில் டார்வினால் கண்டறியப்பட்ட பரிணாம வளர்ச்சி பற்றி இரத்தினச் சுருக்கமாக கம்பர்

தெரிவித்துள்ளார். மாரீசன் இராவணனின் வற்புறுத்தலால் மாய மான் தோற்றத்தில் சீதை கண்படும்படி தோன்றுகின்றான். பொன்மான் பொய் மானோ என்று ஐயப்பட்ட தம்பி இலக்குவனைப் பார்த்து இராமன் கூறும்போது இந்த அறிவியல் வரிகள் காணப்படுகின்றன.

**பல்ஆயிர கோடி பரந்துளவால்**
***இல்லாதன இல்லை – இளங்குமரா***

மன்னுயிர்கள் பல்லாயிரம் கோடியாக இன்றைக்கு விரிந்துள்ளன. உயிரினக் கலப்பில் இல்லாதன யேதுமில்லை என்று சொல்வதில் பல்லுயிரிகள் (Bio-diversity) பற்றிய கம்பரின் சிந்தனைகள் வெளிப்பட்டுத் தோன்றுகின்றன. பரிணாம வளர்ச்சியின் எல்லையைத் தொட்டுக் காண்பிப்பது போல் ஜடாயு, சுக்ரீவன், வாலி, அனுமன், கரடிப் படை போன்ற பாத்திரங்களைப் படைத்துள்ளார். அறிவியல் மிக வளர்ந்த இந்நாளில் வெளிவரும் சில ஆங்கில மொழித் திரைப்படங்களில் இது போன்ற பாத்திரங்களை வேற்றுலக வாசிகளாகக் காட்டியுள்ளனர். இதைப் பார்க்கும் போது நம் கம்பர் அவர்களுக்கெல்லாம் ஒரு முன்னோடியாகத் திகழ்கின்றார்.

## சார்புடை நேரம்

நுண் பொருளியலில் அடிப்படைத் துகள்களைப் பற்றி ஆராய்ந்த விஞ்ஞானிகள் குறுகிய காலம் வாழ்நாள் கொண்ட சில அடிப்படைத் துகள்கள் எங்ஙனம் நெடுந்தொலைவு கடந்து வந்து பூமியை அடைகின்றன என்று புரியாமல் இருந்தார்கள். சார்பு வேகத்தைப் பொறுத்து பொருளின் பரிமாணம் மட்டுமின்றி அளவீட்டுக் காலமும் பொருள் இருக்கும் வெளியும் கூட காண்போர்களுக்கு வேறுபடும் என்ற ஐன்ஸ்டினின் சார்பியல் கொள்கை இதற்கு பின்னாளில் விளக்கம் கொடுத்தது. நேரத்தின் சார்பியல் தன்மையைப் பற்றி சீதையின் பிரிவால் வாடும் இராமனின் மன நிலையால் கம்பர் தெரிவித்திருக்கின்றார். அயோத்திப் படலத்தில் சீதையைப் பிரிந்த இராமனுக்குத் தூக்கம் வரவில்லை. அந்த இரவு நீண்டு ஒருவாறு கழிந்தது என்று குறிப்பிட்டுள்ளார். இது மனநிலையால் நேரத்தில் ஏற்படும் சார்பியல் என்றாலும் நேரமும் சார்பியலுக்கு உட்பட்டதே என்பதைச் சுட்டிக் காட்டியிருப்பது கம்பரின் அறிவியல் திறத்திற்கு மற்றுமொரு சான்று.

## முடிவுரை

கம்பரின் ஆழ்ந்த அனுபவங்களின் அழுத்தமான உச்சரிப்புக்களே அறிவியல் வரிகளாக மலர்ந்திருக்கின்றன என்பதைப் பறை சாற்றுவதற்கு இவ்வெடுத்துக் காட்டுகள் போதுமானதாகும். கம்பரால் எடுத்தாளப் பட்டிருக்கும் பழமொழிகள் அவருடைய பல்துறை அறிவியல் புலமையைத் தெரிவிக்கின்றன. விமானம் பற்றி பல விடங்களில் கூறி, ஆகாய வழிப் போக்குவரத்தைப் பற்றித் தெரிவித்திருப்பதால் வானில் பறக்கும் சாத்தியக் கூறு பற்றிய தொழில் நுட்பத்தையும் கம்பர் அறிந்திருக்க வேண்டும் என்றே எண்ணத் தோன்றுகிறது என்றாலும் தமிழர்களின் அறிவியல் திறமைக்கு இலக்கிய வரிகளாவது பதிவுகளாக இருக்கின்றனவே என்ற மகிழ்ச்சி மட்டுமே முடிவில் கிடைக்கின்றது.

---

# மாசினை நீக்கும் ஆசான்

முனைவர் மலையமான்

ஆசான் என்பவர் மாசினை நீக்கும்
ஈசன்; மனிதக் கடவுள்; சிறிய
மாணவர் மனத்தில், எழுந்திடும் தீப்பொறி
தூணுயர்த் தீப்பந்தச் சுடராய் மாற்றுவார்;

மனவயல் நாற்று ஒரு சிறு செடியை
கனிதரு மரமாய்த் தழைக்கச் செய்வார்;
அமைதி வானத்து அழகு நிலாப்போல்
தமது அறிவொளி தரணியில் பரப்புவார்;
உமிபோல், மாணவ நெல்மணி காப்பார்;
நிமிடத் துளியிலும் நன்மையே பூப்பார்;
அவர்,
தன்னலம் துறந்த தொண்டின் வடிவம்;
மின்னல் மேக மழையில் படிவம்;
கரைசேர்க்கும் தோணி; உயர்த்திடும் ஏணி;
உரு எழில் புகழ்மாலை தொங்கிடும் ஆணி;
சமுதாயப் பயிரின் சரியான உழவன்;
சுமைப்பழக் கடமை தரித்திடு தொண்டன்;
அமைதியின் துணைவன் அறப்போர் மழவன்.

# பண்பாட்டு விழுமியங்கள்

ஜெ. ஜெயமதி
சிதம்பரம்

## முன்னுரை

மக்கள் சிறப்பாக வாழ்வதற்கான நெறிமுறைகளே பண்பாட்டு விழுமியங்கள் எனலாம். பண்பாடும், பண்பாட்டு விழுமியமும் நுண்மையான பொருள் வேறுபாடு உடையன எனினும் பண்பாடு எனும் பருப்பொருளுள் காணப்படும் பல்வேறு கிளைகளுள் ஒன்றான நுண்பொருளாகப் பண்பாட்டு விழுமியத்தைக் கூறலாம். தொல்காப்பியர் காலம் தொட்டு பண்பாட்டிற்கும் விழுமியத்திற்கும் தனித்தனியே விளக்கங்கள் இருந்து வந்துள்ளன. ஆனால் பண்பாட்டு விழுமியங்கள் என்ற சொல்வழக்கிற்கான விளக்கம் காணப்படவில்லை. இப்பண்பாட்டு விழுமியங்கள் என்ற சொல்வழக்கை முதன்முதலாக பண்பாட்டு மானுடவியலார் கையாண்டுள்ளனர். இக்கருத்தை நிறுவும் வகையிலும், பண்பாட்டு விழுமியங்கள் என்ற நுண்பொருள் விளக்கம் குறித்தும் இக்கட்டுரையில் ஆய்வு செய்ய முற்படுகின்றது.

## பண்பாடு குறித்த விளக்கங்கள்

பண்பாடு என்ற சொல்வழக்கு கலைக் களஞ்சியங்கள், அகராதிகள், சங்க இலக்கியங்களுள் ஒன்றான கலித்தொகை, திருக்குறள் முதலானவற்றில் வழங்கப்பட்டு அதற்கான விளக்கங்கள் இன்று வரை ஆன்றோரால் கையாளப்பட்டு வருகின்ற சிறப்புடைத்து எனலாம்.

## கலைக்களஞ்சியம் காட்டும் பண்பாடு

பண்பாடு என்ற சொல்லுக்கு ஆங்கிலத்தில் "Culture' என்ற சொல் வழங்கப்படுகின்றது. அமெரிக்க கலைக்களஞ்சியம் பண்பாடு என்பதற்கு

> **“எண்ணங்கள், உணர்வுகள், மதிப்பீடுகள், குறிக்கோள்கள், செயல்முறைகள், இயல்புகள் முதலான பல்வேறு எண்ணற்றத் தன்மைகளை உள்ளடக்கியது”**

என பொருள் தருகின்றது.

## சமூக அறிவியல் கலைக்களஞ்சியக் கருத்து

சமூக அறிவியல் கலைக்களஞ்சியம் பண்பாடு என்பதற்கு

**"பண்பாடென்பது பரம்பரையான நல்ல குடித்தன்மையாலும், பிறரிடம் வேறுபாடு காணாத நல்ல ஒழுக்கத்தாலும் பொருந்த அமைவதாகும்."**

என்று பலராலும் மேற்கொள்ளப்படுவதே பண்பாடு என்ற பொருள்பட விளக்கமளித்துள்ளது.

## அகராதி கூறும் விளக்கம்

மதுரைத் தமிழ்ப் பேரகராதியும் பண்பாடு குறித்தும் விழுமியம் குறித்தும் தனித்தனியே விளக்கமளிக்கின்றது.

பண்பாடு - செவ்வி, குணநலம், சீர்திருத்தம், பெருமை தன்மை, அமைதி, இயல்பு

பண்பு - குணம், தகுதி, விதம், சுபாவம்

பண்பட்டவன் - உலக அனுபவமுள்ளவன்

என்று பண்பாடு குறித்த விளக்கம் தனியே வழங்கப்பட்டுள்ளது.

## கலித்தொகை உணர்த்தும் பண்பாடு

சங்க இலக்கியங்களுள் ஒன்றான கலித்தொகையின் பாடல் வரியானது, பண்பாடு என்பதற்கு விளக்கமாகப் பலராலும் பன்னெடுங்காலமாக வழங்கப்பட்டு வருகின்றது. பண்பாடு என்றாலே அதன் விளக்கமாக விளங்கும் கலித்தொகையின்

**"ஆற்றுதல் என்பதொன் றலர்ந்தவர்க் குதவுதல்**
**போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை**
**பண்பெனப் படுவது பாடறிந்து தொழுகுதல்**
**அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை"**

இவ்வரிகளையே எடுத்துக்காட்டுவர். இப்பாடலில் ஆற்றுதல், போற்றுதல், பண்பு, அன்பு, அறிவு, செறிவு, நிறை, முறை, பொறை முதலான

நற்பண்புகளை உடைய சான்றோரே பண்புடையார் எனப்படுவர் என்று கலித்தொகை விளக்கமளிக்கின்றது. இங்கு பண்பு என்பதற்கும் பண்புடையார் என்பதற்குமான சொல் விளக்கங்கள் காணப்படுகின்றனவேயொழிய பண்பாடு என்ற சொல்வழக்கு வழங்கப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது எனலாம். எனினும் அவை பண்பாடு என்பதற்கு இணையான பொருள் விளக்கங்களே எனலாம்.

## திருக்குறள் காட்டும் பண்பாடு

திருக்குறளிலும் பண்பாடு என்ற சொல் குறித்தான விளக்கம் காணப்படவில்லை எனலாம். பண்புடையார், பண்புடைமை, பண்பு என்ற சொற்களே மிகுதியாகக் கையாளப்பட்டுள்ளன என்பதற்கு எடுத்துக்காட்டாக ஒரு குறளை எடுத்துரைக்கலாம்.

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மண்" (குறள் - 996)

சிறந்த பண்புடையார், இல்லையென்றால் இவ்வுலகம் மண்ணில் புகுந்து அழிந்துபோகும், என்று பண்புடையார் குறித்தே கூறப்பட்டுள்ளது. ஆகவே இப் பண்பாடு என்ற சொல் பிற்காலத்திலேயே வழங்கப்பட்டிருக்க வேண்டும். தொடக்க காலத்தில் பண்பு என்ற பொருளிலும், பண்புடைமை என்ற பொருளிலும் இப்பண்பாடு என்ற சொல் வழங்கப்பட்டிருக்க வேண்டும் எனலாம். அமெரிக்க கலைக்களஞ்சியம் பண்பாடு என்ற சொல்லுக்கான விளக்கமளித்துள்ளதால் இது ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தமிழில் கலந்த சொல் என்ற முடிவுக்கு வர இடமுள்ளது. இக்கருத்தை நிறுவும் வகையில் "oxford' ஆங்கிலப் பேரகராதியும் இது ஒரு லத்தீன் சொல் என்று விளக்கமளிக்கின்றது. அவ்வரிகளாவன :

*"Culture - ORI - GIN Latin Culture 'growing'"*

இச்சொல் லத்தீனிலிருந்து வந்தது என்றாலும் அச்சொல்லின்படி முழுமையாக வாழ்ந்து காட்டியவர்கள் தமிழர்கள். ஆகவே இவ்வாழ்வின் பொருளை எடுத்துக்கொண்டு அதற்கு ஆங்கிலேயர் தமக்குப் புரியும் வகையில் அமைத்துக் கொண்ட சொல்லே 'பண்பாடு' 'Culture' என்ற சொல்லாகும் எனலாம்.

## விழுமியம் குறித்த விளக்கங்கள்

விழுமியம் குறித்த விளக்கங்கள் தொல்காப்பியர் காலம் முதற்கொண்டே வழங்கப்பட்டு வந்துள்ளன. மேலும் இச்சொல் அகராதிகள், தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள், உரையாசிரியர்கள் விளக்கங்கள் முதலானவற்றிலும் பயின்று வந்துள்ளன என்பதை கீழ்வரும் எடுத்துக்காட்டுகள் வழி அறியலாம்.

## அகராதியில் விழுமியம்

மதுரைத் தமிழ்ப் பேரகராதியில் விழுமியம், விழுமியோர் முதலான விளக்கங்கள் அமைந்துள்ளன. அவையாவன :

விழுமம் – இடும்பை, சிறப்பு, சீர்மை, நன்மை

விழுமிய – சிறந்த, உசித, மேன்மையான, அரிய, சீரிய

விழுமியர்

விழுமியோர் – சிறந்தோர், பெரியோர்.

என மற்றவற்றைக் காட்டிலும் உயர்ந்த, சிறந்த என்ற பொருள்பட விழுமியம் வழங்கப்படுகிறது எனலாம்.

## தொல்காப்பியத்தில் விழுமியம்

எப்பொருளை விளக்க முற்பட்டாலும் முதலில் தொல்காப்பியத்தில் காணப்படும் அதற்கான விளக்கத்தினை எடுத்துக்காட்டுவர். அத்தகைய பொருள் செறிவுமிக்கத் தொல்காப்பியத்தில் விழுமியம் என்பதற்கும் விளக்கம் உரைக்கப்படுகின்றது. தொல்காப்பியம் உரியியல் 55ஆம் பாடலில் சீர்மை, சிறப்பு, இடும்பை என்பவை விழுமம் என்பதன் பொருள் நிலைகள் என்று விளக்கமளிக்கின்றது என்பதை,

**"விழுமம் சீர்மையும், சிறப்பும், இடும்பையும்"** (தொல்.உரி. 55)

இந்நூற்பா உணர்த்துகின்றது. இளம்பூரணர் இதற்கு உரை கூறுமிடத்து

**"விழுமியோர் என்றக்கால் சீரியர் என்பதாம்"**

என்று கூறுகின்றார்.

## சங்க இலக்கியத்தில் விழுமியம்

சங்க இலக்கியங்களுள் ஒன்றான புறநானூற்றில் விழுமியம் என்பதற்கான விளக்கம் காணப்படுகின்றது. விழுமியம் என்ற சொல் வழக்கு சங்க காலம் முதற்கொண்டே இருந்து வந்துள்ளது எனலாம். விழுமியம் என்ற தொடர் புறநானூற்றில் 78ஆம் பாடலில் இடம் பெற்றுள்ளது. இதனை,

"மலைப்பரு மலை மதியார் சிலைத்தெழுந்து
விழுமியம் பெரியம் யாமே"

இவ்வடிகள் உணர்த்துகின்றன. விழுமியம் என்பதற்குச் சிறப்புடைய (உ.வே.சா. 1963 : 184) என்பதும், விழுமியோர் என்ற புறநானூற்று வரிக்குப் பெரியோர் என்று புறநானூற்றுப் பழைய உரைகாரர் தரும் விளக்கமும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## திருக்குறளில் விழுமியம்

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய திருக்குறளும் விழுமியம் என்பதற்கு மேன்மை என்ற பொருளில் விழுப்பம் என்று வழங்கி விளக்கமளிக்கின்றது. இதனை,

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்" (திருக்குறள் 131)

இக்குறளின் வழி அறியலாம். ஒழுக்கம் உடையார் மேன்மையாக அதாவது சிறப்பாக மதிக்கப்படுவர். திருவள்ளுவர் போன்றே உரையாசிரியர்களும் விழுமியம் என்பதற்குச் 'சிறந்த' என்ற பொருள்பட விளக்கமளித்துள்ளனர்.

## உரையாசிரியர்களின் விழுமியம் குறித்த விளக்கங்கள்

உ.வே. சாமிநாதையர் விழுமியோர் என்ற பதிற்றுப்பத்துத் தொடருக்கு,

"வீரத்தில் சிறந்தோராகிய படைஞர்" (உ.வே.சா. 1993 : 114)

என்று தமது குறிப்புரையில் எடுத்துரைக்கின்றார்.

"சீரிய வீரர்"

என்று ஔவை சு. துரைசாமிப் பிள்ளை (1973 : 209 ) அவர்கள் விளக்கமளிக்கின்றார். அதாவது வீரர்க்குரிய சால்பனைத்தும் நிரம்பிய சான்றோர் என்ற பொருள்பட விளக்கமளிக்கின்றார். இவ்விளக்கங்களால்

**விழுமியம் என்பதற்கு சிறப்புடைமை என்ற பொருளும்**

**விழுமியோர் என்பதற்கு சீரிய குணங்களை உடையோர்**

என்ற பொருளும் வழங்கப்படுகின்றது எனலாம்.

## பண்பாட்டு மானுடவியலார் கருத்து

பண்பாட்டு மானுடவியலாரே பண்பாட்டு விழுமியங்கள் என்று பண்பாட்டையும் விழுமியத்தையும் இணைத்து இவ்வாறு ஒரே சொல்லாக வழங்கினர் எனலாம். ஒவ்வொரு பண்பாட்டிலும் இடம் பெற்றுள்ள கூறுகளை அவற்றின் பண்புகளின் அடிப்படையில் மூன்று வகையாகப் பிரித்து விளக்குவர். அவையாவன :

1. பொருள்சார் கூறுகள் (Material Components)
2. அறிதல் சார் கூறுகள் (Cognitive Components)
3. நெறியியல் கூறுகள் (Normative Components)

இவற்றுள் மூன்றாவதாக அமைந்த நெறியியல் கூறுகளில் விழுமியங்கள், நெறிமுறைகள், வழக்கடிபாடுகள், மரபான்மைகள், அளிப்புகள், வழக்கங்கள், பழக்கங்கள் ஆகியவை முதன்மையானவை என்பர். (பக்தவத்சலபாரதி 1999 : 156-9)

"ஒரு பண்பாட்டைச் சேர்ந்தோரின் வாழ்வியலுக்கும், செயல்களுக்கும், நடத்தைமுறைக்கும் *(Behaviour Pattern)* எவை எவை அவசியமென்று கருதப்படுகின்றதோ அவையே அப்பண்பாட்டினரின் விழுமியங்கள் (Values) ஆகும். மக்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து வாழ முற்படும்போது எவை எவை எல்லாம் இன்றியமையாதது எனக் கருதப்படுகின்றதோ அவை பண்பாட்டு விழுமியங்கள் (Cultural Values) எனப்படும்".

(மேலது, 159)

என்ற பண்பாட்டு மானுடவியலாரே பண்பாட்டு விழுமியங்கள் என்ற சொல்லை முதன் முறையாகக் கையாண்டுள்ளனர் எனலாம். இதனை பண்பாட்டு மானுடவியலாளரான பக்தவத்சல பாரதி, தமது பண்பாட்டு மானுடவியல் என்ற நூலில் ஆராய்ந்து கூறிய இவ்வரிகளின் வழி அறியலாம்.

## பண்பாட்டு விழுமியங்கள்

மக்கள் எவற்றைச் சமூக மேம்பாட்டிற்கு, சமூக நன்மைக்கு உகந்தவை, முக்கியமானவை எனக்கருதி மதிப்பு அளிக்கிறார்களோ, அவையே பண்பாட்டு விழுமியங்கள் எனப்படும். மக்கள் தங்களுடைய சமூக மேம்பாடும், சமூக நன்மையும் பண்பாட்டு விழுமியங்களோடு பிணைந்திருக்கும் என்று கருதுவார்கள். அப்படிப்பட்ட நிலையில் அவற்றிற்குப் பெரிதும் மதிப்புக் கொடுத்து அவற்றைப் போற்றிப் பேணுவார்கள். அவற்றுடன் உணர்ச்சிப் பூர்வமான பிணைப்பு வைத்திருப்பார்கள். அவற்றிற்காகப் போரிடவும், உயிர் துறக்கவும் துணிவார்கள் எனலாம். இத்தகைய பண்பாட்டு விழுமியத்தை மீறும் பொழுது சமூக தண்டனைக்குரியவர்களாகவும் கருதப்படுவர். இவற்றையெல்லாம் உள்ளடக்கியவற்றையே பண்பாட்டு விழுமியங்கள் என்கிறோம்.

### எ.கா.

கற்பு, தேசபக்தி, வாக்கு நாணயம் முதலியன விழுமியங்களாகக் கருதப்படுகின்றன. இவற்றை மக்கள் மிகவும் மதிப்போடு போற்றுகிறார்கள். உயிரைக் கொடுத்தாவது இவற்றைக் காக்க வேண்டும் என உணர்ச்சிப் பூர்வமாக மேற்கொள்கின்றனர் என்பதே உண்மை.

## முடிவுரை

மேலே எடுத்துக் கூறப்பட்ட விளக்கங்கள் வழி தொல்காப்பியர் காலம் முதற்கொண்டு பண்பாடு குறித்தும், விழுமியங்கள் குறித்தும் தனித்தனியே விளக்கங்கள் கூறப்பட்டனவேயொழிய பண்பாட்டு விழுமியங்கள் என்ற சொல்வழக்கை முதன்முதலாய்ப் பண்பாட்டு மானுடவியலாரே கையாண்டு விளக்கமளித்துள்ளனர் என்பதை உணரலாம்.

தேசபக்தி, கற்பு, வாக்கு, நாணயம் முதலான விழுமியங்களைத் தழுவி, நெறிகள் குறிப்பாக அமைகிறபோது அவை வலுவான சக்திகளாக

மாறுகின்றன. பெண்கள் கற்போடு வாழ்வது, தேசபக்தி, வாக்கு நாணயம் முதலிய வழக்கடிபாடுகள் பண்பாட்டு விழுமியங்களைத் தழுவி அமைந்திருப்பதால் மக்கள் அந்த விழுமியங்களுக்குக் காட்டுகிற மதிப்பு மரியாதை உணர்வை வழக்கடிபாடுகளுக்கும் காட்டுகிறார்கள். அந்த நிலையில் அந்த வழக்கடிபாடுகள் அவர்களை மிக எளிதில் கட்டுப்படுத்தி தங்கள் வசத்தின் கீழ் கொண்டு வருகின்றன. இவ்வாறு கொண்டு வரப்பட்ட விதிகள் பல அதனைப் பின்பற்றி வருகின்ற மக்களின் மக்கள் கூட்டத்தின் பண்பாட்டு விழுமியங்களாக நின்று நிலைத்து இன்று வரை பெருமைப்பட புகழப்பட்டு வருகின்றன.

---

# வாசகர் வாசகம் ①

பேரன்புசால் செந்தமிழ் ஆசிரியர் அய்யா,

அவர்களுக்கு வணக்கம். எளிய பதம், இனிய ஓசை, கற்பனை வளம், கருத்துச் செறிவு, யாப்பியல், உவமைகள், மெய்ப்பாடுகள் அனைத்தும் ஒருங்கே பொதிந்து கிடக்கும் பாக்கள் புனைந்து சமரச சுத்த சன்மார்க்க நெறி காட்டிய வள்ளலாரின் இலக்கிய நயத்தில் மெய்ப்பாட்டின் வண்ணத்தை வீர சக்திவேல் நனிசிறக்க வெளிப்படுத்தியிருந்தார். அமிழ்தும் நஞ்சும் கீழ்வான் மேல்வான் என்றாலும் திருவள்ளுவர் அவற்றை எவ்வாறு, எவ்விதம், எங்கெங்கே கையாண்டுள்ளார் என்பதை ஐம்பொறியாரின் விளக்கம் பளிச்செனக் காட்டிற்று. தமிழுக்கு அமுதென்று பேர் என்றார் பாவேந்தர் என முடித்திருக்கலாம். தொல்காப்பியரின் மெய்ப்பாட்டிலக்கணம் திருவாதவூராராலும் செயங்கொண்டாராலும் எவ்வாறு கையகப்படுத்தப்பட்டுள்ளது? என்பதை அங்கையற்கண்ணியாரின் அலசலில் அறிய முடிந்தது. குறுந்தொகையில் இடம் பெற்றுள்ள கடை ஏழு வள்ளல்கள் பற்றியும் அகுதை, ஆதிதருமன், எவ்வி, கொங்கர், பூழியர், நந்தர் பற்றிய குறிப்புக்களையும் 15 பக்கங்களில் ஜெயமேரி குறுந்தொகை வரிகளை மேற்கோளாய்க் காட்டித் தந்திருந்த கருத்துப் பிரிவுகள் எல்லாமே தேனாய் இனித்தன. கொன்றவனுக்கு நன்றி கூறிய குணக்குன்றாம் புத்தர் பிரான் பற்றிய கவிவேந்தரின் பாடல் நெஞ்சில் நிலைத்தது. கொன்றவன் உழவன்? எனும் வேதனையைத் தவறாகக் கலந்து விட்ட நச்சுக் காளான் எனும் வரி ஆற்றுப்படுத்திற்று.

அன்புடன்,

**புலவர் ந. ஞானசேகரன், திருலோக்கி**

# திருக்குறளில் செவ்வியல் கூறுகள்

முனைவர் மு. மீனா
மதுரை

## முன்னுரை

மரபு சார்ந்த இலக்கியங்களையும் இலக்கணங்களையும் தன்னகத்தே கொண்டது நம் தமிழ்மொழி. அதன் மேன்மையைத் தமிழ் அறிஞர்களும் தமிழ் ஆர்வலர்களும் தொடர்ந்து வலியுறுத்தியதன் அடிப்படையில் தமிழ் மொழியானது 2004ஆம் ஆண்டு இந்திய நடுவண் அரசால் 'செம்மொழி' என்று அறிவிக்கப்பட்டது. தொல்காப்பியம் முதல் முத்தொள்ளாயிரம் வரையிலான 41 இலக்கியங்கள் செவ்வியல் / செம்மொழி இலக்கியங்கள் என்று வரையறுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கதாய் விளங்குகின்ற திருக்குறளில் அமைந்துள்ள செவ்வியல் கூறுகளை எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## செவ்வியல்

'Classical' என்னும் இலத்தீன் மொழிச் சொல் செவ்வியல் என்று வழங்கப்படுகிறது. இச்சொல் இன்று நடைமுறையில் பல்வேறு பொருட்களில் பயன்படுத்தப்படுகின்றது. பெரும்பாலும் முதல் தரமானது (First Rank), ஆதாரபூர்வமானது (authority), தொன்மையானது, அனைவராலும் ஏற்றுப் பாராட்டப்பெறும் பொதுமைத் தன்மையுடையது (typical)' என்பன போன்ற பல்வேறு பொருட்களில் பயன்படுத்தப்படுகின்றது. இன்றைய நிலையில் மிகச்சிறந்த இலக்கியப் படைப்பும் மொழியும் பொதுநிலையில் செவ்வியல் என்ற சொல்லால் சுட்டப்படுகின்றன. எந்தக் கலைப் படைப்பினையும் செவ்வியல் படைப்பு என்று சுட்டும் அளவிற்குச் செவ்வியல் என்னும் சொல் தற்போது பொருள்விரிவு பெற்றுள்ளது என்று ஜி. ஜான்சாமுவேல் குறிப்பிடுகிறார்.

## செம்மொழித் தமிழ்

இந்தியச் செம்மொழிகள் இரண்டினில் வடமொழி வழக்கில் இல்லை என்றும் தமிழ்மொழி தொன்றுதொட்டு வழங்கிவரும் சிறப்பிற்குரியது என்றும்

ஏ.கே. ராமானுஜன் கோவையில் நடந்த செம்மொழி மாநாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் முதல் செம்மொழி தமிழே என்ற கருத்தினைத் தேவநேயப் பாவாணர், "தி பிரைமரி கிளாசிக்கல் லாங்குவேஜ் ஆப் தி வேர்ல்டு" என்று ஆங்கிலத்தில் தம் நூலில் விளக்கியுள்ளார்.

## செம்மொழிக்கான தகுதிகள்

ஒருமொழி செம்மொழியாக் இருக்கிறது எனில், சில பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும் என உலகியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். ஒரு மொழி, தொன்மை, தனித்தன்மை, பொதுமைப் பண்பு, நடுநிலைமை, பலமொழிகளுக்குத் தாய்மொழியாக விளங்குதல், பண்பாடு மற்றும் கலைகளைப் பெற்றிருத்தல், பிறமொழிக் கலப்பின்மை, இலக்கிய, இலக்கணச் செழுமை, மொழிக் கோட்பாடுகளைப் பெற்றிருத்தல், செழுமை, நுண்மை அமைப்புகள் நிகழ்த்தல் ஆகிய தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்று குறிக்கப்படுகிறது. அதன் அடிப்படையில் செவ்வியல் இலக்கியத்தின் தன்மையும் வரையறுக்கப்படுகிறது.

## செவ்வியல் இலக்கியம்

"இலக்கியத்தைப் பொறுத்த வரையில் சிறந்த கலையம்சம், ஒழுங்கு, இயைபு (harmony), நடுவு நிலைமை, மிகை உணர்ச்சியின்மை, தற்சாராத் தன்மை என்பனவற்றை எல்லாம் உள்ளடக்கி நிற்கும் படைப்புகள் செவ்வியல் படைப்புகளாகப் போற்றப்பட்டன. எந்த ஓர் இலக்கியத்தின் ஒரு பகுதி அவ்விலக்கியத்தின் முழுமைக்கும் கலைச்சிறப்பிற்கும் ஊறு ஏற்படாமல் எடுக்கவோ இணைக்கவோ முடியாதோ அதனைச் செவ்வியல் இலக்கியம் என்று குறிப்பிடலாம் என்பர்". இத்தகைய செவ்வியல் இலக்கியக் கூறுகள் அனைத்தும் திருக்குறளில் நுட்பமாக இடம் பெற்றுள்ளன.

## திருக்குறளில் அமையப் பெற்றுள்ள செவ்வியல் கூறுகள்

செம்மொழித் தகுதி மற்றும் செவ்வியல் இலக்கியக் கூறுகளை ஒருங்கிணைத்த வகையில்,

| | |
|---|---|
| தொன்மை | சமயச்சார்பற்ற தன்மை |
| தனித்தன்மை | உயர்சிந்தனை |

பொதுமைப்பண்பு கலைநுட்பம்

நடுவுநிலைமை மொழிக்கோட்பாடு

வாழ்வியல் விழுமியங்கள்

ஆகிய கூறுகள் திருக்குறளில் இடம் பெற்றுள்ளன.

## தொன்மை

காலத்தால் மிகவும் பழமையான இலக்கியமானது தொன்மையுடைய இலக்கியம் என்று கருதப்படுகிறது. செவ்வியல் என்பது தொன்மையுடையது; பழஞ்சிறப்பினை உடையது. அதாவது தான் வேறு எந்த இலக்கியத்தையும் பின்பற்றாது, தன்னைப் பின்வருகின்ற இலக்கியங்கள் பின்பற்றுமாறு திகழ்வது. அத்தகைய பண்பு திருக்குறளுக்குப் பொருந்துவதாக அமைந்துள்ளது. பிற்கால இலக்கியங்கள் அனைத்திலும் தன் செல்வாக்கை ஏற்படுத்திப் பின்னுள்ளோர் பின்பற்றும் ஒரு முன்மாதிரி இலக்கியமாகத் திகழும் விதத்தில் தலைமையுடையதாகவும், தொன்மையுடையதாகவும் திகழ்கிறது.

திருவள்ளுவரின் கருத்துக்களும் தொடர்களும் சிலப்பதிகாரம், மணிமேகலை, திருவாய்மொழி, சிந்தாமணி, கம்பராமாயணம், தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம், அருட்குறள் முதலான இலக்கியங்களிலிருந்து இன்றைய திரைப்பாடல்கள் வரையிலும் போற்றிக் கையாளப்பட்டுள்ளன.

சான்றாகக் கிறித்துவ இலக்கியங்களில் கையாளப்படும் தன்மை இங்குச் சுட்டப்பெறுகின்றது. தேம்பாவணியில் திருக்குறள் தொடர் ஒற்றுமை, கருத்து ஒற்றுமை என்னும் நிலைகளில் தாக்கம் பெற்றுள்ளது.

'அறத்தால் வருவதே இன்பம்'

என்னும் குறளின் கருத்து,

'அறத்தில் துறும்புகழ் ஒண்புகழ் என்ப
அடும்பகை நின்றனர் கொல்'

என்று இடம்பெற்றுள்ளது.

இரட்சணிய யாத்திரிகத்தில் காப்பியம் முழுவதிலும் 70க்கும் மேற்பட்ட திருக்குறட்பாக்கள் ஆளப்பட்டுள்ளதாக வீ. ஞானசிகாமணி தன் ஆய்வில் குறிப்பிட்டுள்ளார். (கிறித்துவர்களின் திருக்குறள் கொடை ப.488)

'அருட்செல்வம் செல்வத்துட்செல்வம்'

என்னும் அறத்துப்பால் குறள்,

'அருளின் செல்வமே செல்வத்துட் செல்வம்'

என்று இடம் பெற்றுள்ளது.

முனைவர் வீ.ப.கா. சுந்தரனார், 'அருட்குறள்' என்னும் தன் படைப்பில்,

'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்'

என்னும் குறளை,

'இன்னா செய்தாரை மீட்டலாம் இன்புற
நன்னயம் செய்து கொளல்'

என்று படைத்துள்ளார்.

## தனித்தன்மை

கால வெள்ளத்தைக் கடந்து, இந்நூற்றாண்டு வரை நின்று நிலைப்பதற்குக் காரணம் அதன் தொன்மையும் தனித்தன்மையும் ஆகும்.

புலவர் தம் வாழ்நாளிலேயே புகழ் பெறுதல் என்பது அரிது. அதிலும் தம்மோடு ஒத்த சமகாலத்தில் வாழ்ந்த புலவர்களிடையே ஒருசேரப் புகழ்பெறுதல் என்பது அரிதான ஒன்றாகும். அத்தகைய அரிய சிறப்பைப் பெற்றது திருக்குறளும் வள்ளுவரும் ஆவர். வள்ளுவரைப் பாராட்டிய பாடல்களே திருவள்ளுவமாலையில் அமைந்துள்ள செய்யுள்கள் என்று அறிஞர்கள் குறிப்பிடுவர்.

"அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி
குறுகத் தறித்த குறள்" என்று ஔவையாரும்,

'பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ? பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர் செய் நூலாமோ?' என்று ஒரு புலவரும்

'கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்'

என்று இடைக்காடரும் பாராட்டியுள்ளனர்.

எல்லாப் பொருளையும் தன்னகத்தே தாங்கி நிற்பது குறள் என்னும் கருத்தில் மதுரைத் தமிழ்நாகனார் என்னும் புலவர்,

'எல்லாப் பொருளும் இதன் பாலுள இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்'

என்று சிறப்பாகக் கூறுகிறார்.

திருக்குறள் இன்றும் நம் வாழ்வுடன் பொருத்திக் காட்டவல்லதாய் உள்ளது. இனியும் அது நமக்கு வழிகாட்டவல்லதாய் இருக்கிறது. 2000 ஆண்டுகளுக்கு முன்னரே இதை உணர்ந்த இறையனார் என்ற புலவர் திருவள்ளுவ மாலையில் கீழ்வருமாறு புகழ்ந்து கூறுகின்றார்.

'என்றும் புலராது யாணர் நாட்செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்'

என்று, மலர்கள் அன்றன்று வாடிவிடும்; இம்மலரோ என்றும் புலராது எவ்வளவு நாள் சென்றாலும் புதுமலராகவே நின்று தேன் பிலிற்றும் தன்மையது என்று சிறப்பித்துள்ளார் என்று தமிழண்ணல் தன் 'செவ்வியல் சிந்தனைகள்' என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.

## தற்சார்பின்மை

செவ்வியல் இலக்கியத்தின் அடிப்படைப் பண்பாகத் தற்சார்பின்மை சுட்டப்படுகின்றது.

ஒரு படைப்பாளனின் தனிப்பட்ட தன்மை, சொந்த விருப்பு வெறுப்புக்கள், தன் அனுபவங்கள் முதலியன தன்னுடைய படைப்புகளில் வெளிப்படாதிருத்தலே தற்சார்பின்மையாகும்.

ஒரு படைப்பு, படைப்பாளனை நினைவூட்டாமல், படைப்பில் கூறப்பட்டுள்ள கருத்தை நினைவூட்டுதலே பொருட்சார்புடைய இலக்கியமாகக் கொள்ளப்படும்.

இவ்வகையில் திருக்குறளில் அமைந்துள்ள கருத்துக்கள் யாவும், தற்சார்பு இல்லாமல் பொருட்சார்புடையதாக விளங்குவது அனைவராலும் அறியப்பட்ட செய்தியாகும்.

## உலகப் பொதுவுடைமை

இலக்கியங்கள் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலை, இடம், காலம், மனிதர் என்ற வரையறைகளைத் தாண்டி விளங்கும். அவற்றிலுள்ள கருத்துக்கள் அல்லது பண்புகள், உணர்த்தும் உணர்வுகள் ஆகியன அனைவருக்கும் உரியனவாகக் கருதப்படும். மேலும் உலகெங்கும் ஏற்றுக் கொள்ளத்தக்கனவாய்ப் பொதுமைப் பண்புகளாகத் திகழும் தன்மையே உலகப் பொதுவுடைமை எனப்படும்.

கால வெள்ளத்திற்கு இரையாகாமல் இன்றளவும் நிலைபெற்று வாழும் பேற்றினைத் திருக்குறள் பெற்றுள்ளது. ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்னர் எழுந்த நூல், அக்கால மக்களின் வாழ்க்கை நெறிக்கும் பொருந்தி, இன்னும் மாறாமல் அருட்பயன் விளைப்பதாய், விழுமியங்களைப் பயப்பதாய் விளங்கும் மாண்பு வியக்கத்தக்கதாய் உள்ளது.

அறிதொறும் அறிதொறும் அறியாமையைப் புலப்படுத்துவதாய், நவில்தொறும் நவில்தொறும் நயம் பயப்பதாய் திருக்குறள் விளங்குகிறது.

தமிழ்மக்கள், இந்தியமக்கள் மட்டுமன்றி உலகமக்கள் அனைவரும் பின்பற்றத்தக்க வாழ்வியல் நெறிகளை உரைப்பதாய் விளங்குவதாலேயே திருக்குள் உலகப் பொதுமறை என்றழைக்கப்படுகிறது. அதன் காரணமாகவே திருக்குறள் உலகின் பல்வேறு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. பைபிளுக்கு அடுத்த நிலையில் திருக்குறளே அதிக எண்ணிக்கையிலான மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளது. சில மொழிகளில் நூல் முழுமையும் பெயர்க்கப்படாவிடினும் சில குறட்பாக்களாவது மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. வீரமாமுனிவர் இலத்தீன் மொழியிலும், டாக்டர் போப்பு, வ.வே.சு. ஐயர், தீட்சிதர், ராஜாஜி முதலானோர் ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்துள்ளனர்.

மேலும் தெலுங்கு, மலையாளம், வடமொழி, இந்தி ஆகிய உள்நாட்டு மொழிகள் மட்டுமல்லாது ஜெர்மன், பிரெஞ்சு முதலான மேல்நாட்டு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

## சமயச்சார்பின்மை

திருக்குறள் சமயப் பொதுநூலாகக் காட்சியளிக்கிறது. இந்நூலைச் சைவர்கள், வைணவர்கள், பௌத்தர்கள், சமணர்கள், கிறித்துவர்கள் ஆகிய அனைவரும் தத்தம் சமயக் கருத்துக்கள் குறட்பாக்களில் காணப்படுவதால் தத்தம் சமயத்திற்குரிய நூலே குறள் என்று கூறுவர்.

'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்ற கடவுள்வாழ்த்துக் குறளின் அடிப்படையில் ஜைனர்களும்,

ஆதிபகவன் முதற்றே உலகு என்ற அடியின் அடிப்படையில் சைவர்களும் மற்றும் பிற சமயத்தவர்களும் குறிப்பிட்டாலும், வள்ளுவர், தெய்வம் தொழாள், தெய்வத்துள் வைக்கப்படும் என்பதில் தெய்வம் என்றும் வேண்டுவது வேண்டாமை இலான் என்றும் பொதுவாகவே உரைக்கின்றார். எனவே தான் கல்லாடர்,

**'ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனில்**
**அன்றென்ப ஆறு சமயத்தார் –நன்றென**
**எப்பாலவரும் இயைபவே வள்ளுவனார்**
**முப்பால் மொழிந்த மொழி'**

என்று பாடியுள்ளார்.

## வாழ்வியல் உண்மைகள்

செவ்வியல் இலக்கியம் கூறும் வாழ்வியல் உண்மைகள் அனைத்து மக்களுக்கும் உரிய பொது உண்மைகளாக, உலகப் பொது அனுபவங்களாகத் திகழும். இப்பொதுத் தன்மையே செவ்வியல் பண்பின் உயிர்நாடியாகும். சிறப்பாகத் திருக்குறளில் குடும்ப வாழ்க்கை, அன்பு, பாசம் போன்ற உயிர்ப் பண்புகள் உயிர் மூச்சாக அமைகின்றன. தமிழ்ச் செவ்வியல் படைப்புகள் இல்லற வாழ்வை மையமாகக் கொண்டு திகழ்வதாலும்,

மண்ணில் நல்லவண்ணம் வாழும் நெறிமுறைகளை எடுத்தியம்புவதாலும் குடும்ப வாழ்க்கை, குழுவோடு இணைந்த வாழ்க்கை ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

'கடலன்ன காமம் உழந்தும் மடல்ஏறாப் பெண்ணின் பெருந்தக்க தில்' என்று பெண்கள் மடலேறாத பண்பாட்டைக் கூறும் வள்ளுவர்,

**அந்தணர் என்போர் அறவோர் (30)**

**அறத்தால் வருவதே இன்பம் (39)**

**மங்கலம் என்ப மனைமாட்சி (60)**

**நன்றி மறப்பது நன்றன்று (108)**

**ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் (225)**

**அறிவு அற்றம் காக்கும் கருவி (44)**

**திறனறிந்து சொல்லுக சொல்லை (641)**

முதலான வாழ்வியல் விழுமியங்களை உலகப் பொதுமைக் கூறுடையனவாகப் படைத்துள்ளார்.

## மரபும் இலக்கியக்கலை நயமும்

**'அந்நிலை மருங்கின் அறம் முதலாகிய**
**மும்முதல் பொருட்கும் உரிய என்ப'**

(தொல். 1363) என்னும் நூற்பா வழிப்படி அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்னும் மூன்று பால்களாகப் பகுத்து இயற்றியுள்ளார். அதிகாரமுறைமை, எண்ணிக்கை (10 குறட்பா) ஆகியவற்றைச் சிறப்புடன் கையாண்டுள்ளார்.

செவ்வியல் இலக்கியங்களில் கற்பனை இருப்பினும் இயல்பு மீறிய கற்பனை அமைவதில்லை. அதுபோலவே திருவள்ளுவரின் காமத்துப்பாலில் இயல்பு கற்பனை சிறப்புற அமைந்துள்ளது. இதன் காரணமாகக் காமத்துப்பால் உண்மையான இலக்கியச் சிறப்புடையதாகக் காணப்படுகிறது. கற்போருக்கும் சுவையூட்டக்கூடிய நாடகப் பாங்குடையதாகவும், கலையாகவும் அமைந்துள்ளது.

திருக்குறளின் நடைச்சிறப்பு குறிப்பிடத்தக்கதாக அமைந்துள்ளது. சங்கப் புலவர்கள் சொற்களை மிகச் செறிவாகவும் பொருள் சிறக்கவும் பயன்படுத்தியதைப் போலவே திருவள்ளுவரும் குறட்பாவில் பொருட்செறிவு மிகுந்த தொடர்களையும் சொற்களையும் இனிய சொல்லாக்கங்களையும் படைத்துள்ளார்.

சொற்கள் எண்ணத்தின் கருவிகளாய்த் திகழ்பவை. எனவே அவை எத்துணை அளவு கூர்மையாகவும் திட்பமாகவும் விளங்குகின்றனவோ அத்துணை அளவு எண்ணத்தின் வெளிப்பாடும் திட்பமாகவும் நுட்பமாகவும் அமையும்.

ஒரே சொல்லை அடுத்தடுத்து இருமுறை சொல்லும்போது உணர்ச்சியின் வேகமும் அதிகரிக்கும். திருவள்ளுவரின் தனி நடையாகச் சிறப்புற்றுத் திகழ்கின்ற நெறிகளுள் இதுவும் ஒன்று.

'யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று' (1314)

கூறும் பொருளின் வன்மை மென்மைகளுக்கேற்ப வள்ளுவர் வன்மைமென்மையையும் உடன்பாடு எதிர்மறையையும் பயன்படுத்தி,

'செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்' (26)

என்பது போன்ற குறட்பாக்களைப் படைத்துள்ளார்.

செறிவு வாய்ந்த பல சிறுதொடர்கள் திருக்குறளில் அமைந்துள்ளன.

'யாகாவா ராயினும் நாகாக்க'
'இடுக்கண் வருங்கால் நகுக'
'எண்ணித் துணிக கருமம்'
'நன்றி மறப்பது நன்றன்று'

என்றவாறு அமைந்துள்ள சிறுதொடர்கள் திருவள்ளுவரின் ஆழ்ந்த சிந்தனையின் தூய வெளிப்பாடாகக் காட்சியளிக்கின்றன.

90க்கும் மேற்பட்ட அளபெடைகள் வெறும் ஓசைநயத்திற்காக மட்டும் அமையாது, வள்ளுவர் கூறவந்த கருத்துகளுக்கு வலிமையும் நயமும் சேர்ப்பனவாகவும் அமைந்துள்ளன.

மேலும், மொழிநடைக்கு வளம் சேர்க்கும் உவமையும் உருவகமும் குறளில் சிறப்புற அமைந்துள்ளன.

## உவமை நயம்

கருத்து வெளிப்பாட்டிற்கும் ஆசிரியரின் நடைநயத்தைக் காண்பதற்கும் உவமைகள் பெரிதும் உதவுகின்றன.

"திருக்குறள் கலையழகு மிக்க இலக்கியக் கருவூலமாக விளங்குவதற்கு அவர் பயன்படுத்திய உவமை நடையும் ஒரு காரணம் எனில் அது மிகையாகாது" என்று இ. சுந்தரமூர்த்தி குறிப்பிடுகிறார்.

**'அறைபறை அன்னர் கயவர்'**

**'அச்சாணி அன்னார்'**

**'மலரன்ன கண்ணாள்'**

**'கடலன்ன காமம்'**

**'தேவர் அனையர் கயவர்'**

முதலான உவமைகள் சிறப்புமிக்கன.

## உருவக நயம்

**'நன்கலம் நன்மக்கட்பேறு**

**குணம் என்னும் குன்றேறி நின்றார்'**

போன்ற உருவகங்களின் வாயிலாக ஓர் உணர்வோவியத்தையும் வள்ளுவர் காட்டுவது இங்குச் சுட்டுவதற்குரியது.

**'முறிமேனி முத்தம்முறுவல் வெறிநாற்றம்**

**வேல்உண்கண் வேழத்தோள் அவட்கு'** (1113)

என்னும் குறளில் உருவகங்களின் வாயிலாகத் தலைவியின் அழகுநலத்தை ஓவியமாக்கிக் காட்டுகிறார்.

நால்வகைப் பாக்களுள் தலைமைத் தன்மையுடைய வெண்பாவின் வகைகளுள் ஒன்றான குறள் வெண்பாவால் அமைந்த திருக்குறள், சுருங்கிய சொற்களால் பொருத்தமுறப் பொருள் விளங்கச் செய்கிறது என்றும், எளிய சொற்களால் அரிய பொருள்களைப் புலப்படுத்துகிறது என்றும் உலக மக்களின் உள்ளத்தில் ஒளிந்திருக்கும் இருளை அகற்றும் ஒளிவிளக்காகத் திகழ்கிறது என்றும் புலவர்களால் பாராட்டப் பெற்றுள்ளது.

## நிறைவுரை

1. செவ்வியல் இலக்கியங்கள் அறக்கருத்துக்களுக்கு இன்றியமையாத இடம் தருகின்றன.
2. செவ்வியல் இலக்கியத்தின் பாடு பொருளும் வடிவமும் இணைந்து வருதல் அதன் சிறப்புப் பண்பாகும்.
3. அவை பெரிதும் உலகப் பொதுமறை பொதுமை நோக்கிற்குச் சிறப்பிடம் தருகின்றன.
4. கருத்துக்களைச் சொல்லும் முறையில் ஒருமைப் பண்பு பின்பற்றப்படுகிறது.
5. செவ்வியலில் பாடுபொருள் உயர்ந்ததாக அதிலும் தேர்ந்தெடுத்ததாக அமைய வேண்டும்.

என்ற முனைவர் செ. சாரதாம்பாளின் செவ்விலக்கியப் பண்புகள் குறித்தான கருத்துக்கள் ( சங்கச் செவ்வியல் ) திருக்குறளில் பொருத்தமுற அமைந்துள்ளமை கட்டுரை வழி புலப்பட்டுள்ளது.

மேலும் முத்தாய்ப்பாக, அகில உலக அமைதிக் கலாச்சார ஆண்டாக 2004ஆம் ஆண்டை அறிவித்த ஐ.நா. சபையின் 6 கொள்கைகளைக் கொண்ட 'கொள்கை அறிக்கை 2000' முழுவதும் திருக்குறள் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளமை புலப்படுகிறது.

**கொள்கை 1**

**அனைத்து உயிர்களையும் மதித்தல்**

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழு கலான்" (30)

**கொள்கை 2**

**வன்முறைகளைத் தவிர்த்தல்**

"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை" (76)

**கொள்கை 3**

**பிறரோடு பகிர்ந்து கொள்ளுதல்**

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

**கொள்கை 4**

**பிறர் கருத்தைப் புரிந்து கொள்வதில் அக்கறை**

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு" (355)

**கொள்கை 5**

**புவியைப் பாதுகாத்தல்**

"உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு"

**கொள்கை 6**

**ஒற்றுமையின் சக்தியை உணர்தல்**

"துணைநலம் ஆக்கம் தரும் வினை நலம்
வேண்டிய எல்லாம் தரும்" (651)

இறந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம் என்னும் முக்காலத்திற்கும் பொருத்தமுடையதாகவும் தமிழ்நாடு, இந்தியா மட்டுமல்லாது உலக முழுமைக்கும் பொதுமைத் தன்மையுடையதாகவும் விளங்கும் திருக்குறள் முழுமை வாய்ந்த செவ்வியல் இலக்கியமாகத் திகழ்கிறது என்பதே இக்கட்டுரை புலப்படுத்தும் உண்மையாகும்.

# புதுக் கவிதையா? மரபுக் கவிதையா?

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

புதுக்கவிதை மோகத்தில் மூழ்கிப் பாடல்
புனைகின்ற என்நண்பா! கொஞ்சம் நில், நில்!
விதிகளுக்குள் நமைமுடக்கி மரபில் தீட்டல்
வீண்வேலை என்றாநீ சொன்னாய்? பாட்டுள்
எதுகைகளும் மோனைகளும் இழையும் போதே
இதமான சதங்கையொலி அதற்குக் கிட்டும்!
எதிர்நீச்சல் போட்டீங்குக் காலம் வென்றே
இறவாமல் ஒளிர்வதுதான் மரபுப் பாடல்!

'விதிமுறையேன்? இலக்கணமேன்?' என்றே என்னை
வினவுகின்ற உன்னிடத்தில் கேட்பேன்; 'ஓடும்
நதிகளுக்குக் கரைகள் ஏன்?' எனக்கேட் டாயா?
'நால்வரப்பும் வயலுக்கேன்?' என்கேட் டாயா?
விதிவகுத்து வீடுகளைக் கட்டி னால்தான்
வீதிஎழில் நேர்க்கோடாய் மிளிரும்! செந்தேன்
மதுக்கவிதை யாப்பழகைப் பெற்றால் தானே
மனத்துள்ளே கல்வெட்டாய்ப் பதியும் நண்பா!

'திருப்புகழி'ன் சந்தஇசை மரபுப் பாடல்
தித்திப்பை ஊட்டுவதேன்? 'திருக்குற் றால'ப்
பெருமைசொலும் 'குறவஞ்சி' வண்ணம் நம்மைப்
பித்தர்களாய் மாற்றுவதேன்? செந்நாப் போதார்
அரிய 'குறள்' வெண்பாச்சீர் நேர்த்தி, உள்ளம்
அள்ளிநமை ஈர்ப்பதுமேன்? அதனால், நண்பா!
உருப்படியாய் உன்கவிதை நிலைக்க வேண்டின்
ஒயில்மரபில் எழுதிடுநீ! அதுதான் வாழும்!

# குறள் காட்டும் அறம்

சா. ரோஸ்லின் சில்வா

## முன்னுரை

திருவள்ளுவரைத் தெய்வப்புலவர் என்பர் ஆன்றோர். அவர் தந்த திருக்குறளைத் திருமறை அல்லது தெய்வமறை என்பர். திருக்குறள் உலகியல் நூல் என்பதில் எந்த வித மாற்றுக் கருத்திற்கும் இடமில்லை. திருக்குள் சாதி, சமயம், இனம், மொழி கடந்து காலத்தை வென்று நிற்கும் நூல். பல சமயத்தினரும் மதித்துப் போற்றும் ஒப்பற்ற அறநூலாகும்.

## அறம்

திருவள்ளுவர் வாய்மையையும், அறத்தையும் இறை குணங்களாகக் காட்டுகிறார். திருக்குறளின் முப்பெரும் பிரிவுகளாகிய அறம், பொருள், இன்பம் ஆகியவற்றில் உணர்த்துவதும் இதுவே.

அறம் பற்றிய உண்மைகள் அறத்துப் பாலில் மட்டுமல்லாது முப்பால் முழுவதும் உணர்த்துகிறது. எனவேதான் திருக்குறளை அறநூல் என்கிறோம்.

அறம் என்ற சொல் குறிப்பிடும் பொருள் மிகப்பரந்தது, ஆழமானது. வாழ்வின் அனுபவ முதிர்ச்சிகளின் எல்லையாக இச்சொல் அமைந்துள்ளது. அறம் என்ற சொல்லுக்கு ஈடாக ஒரு சொல்லை வேறு மொழியில் காணமுடியாது. அறம் என்பது தர்மம், சமயம், புண்ணியம், ஞானம், நோன்பு, தகுதியானது என்ற பொருள் கொண்டது. அறம் என்ற சொல்லுக்குச் சமமான வடசொல் தர்மம் என்பதாகும். தர்மம் என்ற சொல்லுக்கு நற்செயல், விதி, நீதி, கடமை, ஒழுக்கம், தானம், இயற்கை எனப் பொருள் கொள்ளலாம். இவ்வாறு நல்லவை அனைத்தும் அறம் என்ற மூன்றெழுத்துக்குள் அடங்கும். (திருக்குறளில் இறைமை, ப. 107)

## அறநெறி

அறநெறி என்பது யாது? "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்" (34) என்று பாடுகின்றார். தமிழ் மாமுனிவர் திரு.வி.க.

அவர்கள், "தீக்குணங்களை அறுப்பதும் நற்குணங்களை வளர்ப்பதுமே திருவள்ளுவர் சொல்லுகின்ற அறமாகும்" என்கிறார்.

ஒருவனின் மனத்தினில் தீய எண்ணங்கள் தோன்றக் கூடாது. அத்தகைய நல்ல மனமே இனிய சொற்களைப் பேச வைக்கும். அம்மனமே ஆக்கந்தரும் செயல்களைச் செய்ய வழி வகுக்கும். நல்லனவற்றை எண்ணுதலும், நல்லதைச் சொல்லுதலும், நல்லதைச் செய்தலும் மாசில்லா மனத்தின் விளைவுகளாகும். இதுவே அறநெறியாகும்.

திருவள்ளுவர், அறத்தில் பொருள் ஈட்டி, அப்பொருளால் இன்புற்று வாழ வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார்.

"அறத்தான் வருவதே இன்பம் மற்றுஎல்லாம்
புறத்த புகழும் இல" (39)

அறச்செயலால் வருவதே இன்பம். அறச்செயலே புகழ்தரும், அறத்திற்கு மாறானது இன்பம் தந்தாலும், துன்பம் ஆகும். புகழையும் பெருமையையும் கெடுக்கும்.

"என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்" (77)

"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு" (204)

அறக்கடவுளாகிய இறைவன் மறத்தை, தீமையை அழித்து அறத்தைக் காப்பார். அறக்கடவுளாக விளங்கும் அந்தணராகிய இறைவன் அடிப்போற்றி நடப்பவர் மற்றைய பொருளும் இன்பமுமாகிய கடல்களை இறைவன் துணைக் கொண்டு எளிதாகக் கடந்து செல்வர். மற்றவர் பிற துன்பக் கடலில் இருந்து மீள முடியாது துன்புறுவர்.

## அறம், அன்பு, அருள்

இம்மூன்றனையும் ஒருசேர வைத்து எண்ணிப் பார்த்தல் வேண்டும். இவ்வொவ்வொன்றும் வாழ்க்கைக்குத் தேவையானது. இவை மூன்றும் சேரும் போதுதான் வாழ்வு முழுமையடையும்.

அறன்இழுக்காது அல்லவை நீக்கி மறன் இழுக்கா
மானம் உடையது அரசு (384)

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும் (388)

இறைவன் அறத்தின் வடிவினன். ஆளும் மன்னனும் அறம் தவறாமை வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

வாழ்க்கை அறத்தின் அடிப்படையில் அமைய வேண்டும். அறத்தோடு பொருந்தி நற்செயல்கள் செய்தால் எல்லா நன்மைகளும், ஆக்கமும் உயர்வும் நாடிவந்து சேரும் என்பதை வலியுறுத்துகிறார்.

அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு (32)

## முடிவுரை

திருக்குறள் முழுவதும் அறம் பற்றிய கருத்துக்கள் நிறைந்து காணப்படுகிறது. இல்வாழ்க்கை, துறவறம், அன்புடைமை, அறிவுடைமை, ஊக்கமுடைமை, பொறையுடைமை, பண்புடைமை, வாய்மை, ஒழுக்கம், நட்பு, காதல், கற்பு முதலிய அறங்கள் திருக்குறளில் பொதிந்து கிடக்கின்றன.

அறவழியில் இன்பம் கிடைக்கிறது. அறத்தால் வருவதே இன்பம். இன்பமான அறவாழ்க்கை வாழ்கின்றவர்கள் சான்றோர்கள். அத்தகைய சான்றோர்கள் தெய்வத்திற்குச் சமமானவர்கள்.

அத்தகைய சான்றோர்களின் வாழ்க்கையை ஏற்று அவர்கள் வழியில் வாழ வேண்டும்.

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

# சோறும் சேறும் !

புலவர் சி. பாண்டுரங்கன், ஆம்பூர்

சோற்றால்ம டைஅடைக்கும் சோழநாடு; கம்பர் !
சோழநாடு சோறுடைத்து : ஔவையார் ! நானிலம்,
சோற்றுக்குப் பஞ்சமில்லாச் சீர்கொண்டே வாழச்
சேற்றில்கை வைத்தேநெல் நாற்றுநடல் உழவர் !
சேற்றில்செந் தாமரைம லர்பூக்கும், நல்ல
செந்நிறமும் நறுமணமும் பூந்தாதும் நல்கும் !
சேற்றில்இ றங்காமல் நெல்,பூ,வாய்த் திடுமோ?
சீர்திசைகள் சிறந்தோங்கச் சேற்றினிலும் உழைப்போம்! (1)

கங்கைஆற் றின்சேற்றால், பயிர்த்தொழிலே செழித்தது !
இமயத்தில் பெற்றவரம் வங்கக்கடல் சேர்த்தது !
வங்கக்கடல் பல்லாயி ரம்புதுக்கல் பசுமை
வாடாத காட்டழகுக் குழவிபெற்றுச் சிறந்தது !
நூறாள்மீ வண்டல்கங் கைக்கரையில் படிந்தது !
நெடியகங்கை, செல்வழியை, மாற்றிபோட்டே சிரித்தது !
ஆறாறு ஆறுநதி தம்கரங்கள் ஏழ்மை
அடித்துவென்று, அனைத்துணவும் அளித்துகங்கை ஆனது ! (2)

காவேரி நதிவண்டல் கரைசோலை செய்தது !
காணுகின்ற இருகரையும் மணிபூட்டிச் சிரித்தது !
பூவேர்நீர் ஊட்டியது ! புனிதபணிச் செய்வது !
பொங்குகடல் சிப்பிபோலப் புகழ்தனிலும் உள்ளது !
நாவேறு பட்டார்க்கும் பசிக்குணவை ஈவது !
நானிலத்தில் விளைகழநி நல்லெருவின் சேறுதான் !
பாவேறு வகையெனினும் பைந்தமிழோ ஒன்றுதான் !
பாண்டம்வீட் டோடெல்லாம் செய்பொருளும் சேறுதான் ! (3)

புதைசேற்றின் நேர்கொடிய குற்றமுறை தீயர்
பொல்லாத நட்புதறிப் பீடுநடை நடப்போம் !
உதைபடும்கால் பந்தாகத் தன்பொருளைச் சுயமாய்
உடன்வைத்துக் கொள்ளாமல் ஊர்க்குதவும் கடம் போல்
நிதம்கொடுப்போம் ! நலம்பகிர்வோம் ! உழைத்துயர்வோம் ! நாடே
நிலாமுட்ட விண்உயரத் தன்மதிப்பில் சிறக்கப்
பதம்பதமாய் ஒன்றிணைந்த பண்நலத்துப் பாபோல்,
பார்போற்ற ஒன்றிணைந்தே நாடுயர உழைப்போம் ! (4)

# கலம்பகப் பாடுபொருள்

க. தங்கதுரை
அண்ணாமலை நகர்

## முன்னுரை

இலக்கியப் படைப்பில் முதன்மையான ஓர் அங்கமாக அமைவது பாடுபொருள். இப்பாடுபொருளைப் படைப்பாளர்களின் எண்ணப்படி காலத்தைக் கருத்தில் கொண்டு சமூக மாற்றங்களைப் பதிவு செய்வதற்காகப் பயன்படுத்தியுள்ளனர். பாடுபொருளானது சமூக நடைமுறைகளைப் படம் பிடித்துக் காட்டும் கருவியாக அமைகின்றது என்பதைக் கலம்பக இலக்கியம் வாயிலாகக் காண்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## காலமும் பாடுபொருளும்

பாடுபொருள் காலத்திற்குக் காலம் மாற்றம் பெற்று அன்றைய சூழலுக்கு ஏற்பவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதை இலக்கிய வரலாற்றின் வழி அறியமுடிகின்றது. சங்க காலத்தில் காதல், வீரம் என்ற இரண்டும் முதன்மைப் பாடுபொருளாக நின்றது. பின் சங்கம் மருவிய காலத்தில் அறம் வலியுறுத்தும் பாங்கு பாடுபொருளானது. அடுத்து சமயங்களின் போட்டி காரணமாக இலக்கியங்களில் அவரவர் சமயத்தின் கடவுள்கள் பாடுபொருளாய் சுட்டப்படினும் அவர்களைப் புகழ்தல் என்பதையே முதன்மைப் பாடுபொருளாகக் கொண்டனர். இது பக்தி இலக்கியம் எனவும் இக்காலத்தைப் பக்தி இலக்கியக் காலம் எனவும் பொருள் கொண்டு அழைத்துள்ளனர். இப்பக்தி இலக்கியக் காலத்தின் பின் தோன்றலான சிற்றிலக்கியமும் தன் கால மாற்றத்திற்கு ஏற்ப கடவுள், மனிதன், சமூகம் போன்ற அன்றைய மாற்றத்திற்கு ஏற்ப கடவுள் மனிதன் சமூகம் போன்ற அன்றைய நிகழ்வுகளைப் பாடும் பொருளுக்குக் களனாகக் கொண்டுள்ளது.

## பாடு பொருள்

ஒரு கவிதையின் நோக்கினை நிறைவேற்றவரும் தலைமைக் கருத்தே பாடுபொருள் (Theme) ஆகும். பாடுபொருள் அடிக்கருத்து, மையக் கருத்து என்றும் அழைக்கப்படுகின்றது. இத்தலைமைக் கருத்து ஒன்று மட்டும் செயல்பட்டுக் கவிதைப் பாடுபொருளை முழுமையாக்கி விட முடியாது. அதற்கு

ஈடுசெய்யும் வகையில் பல துணைக் கருத்துக்களும் இணையாக நின்று அடிக்கருத்திற்கு அழுத்தம் கொடுக்கின்றன என்கிறார் செ. சாரதாம்பாள். இதன் வழியாகப் பாடுபொருளானது தமிழ்க்கவிதைகள் பலவற்றினும் தலைமைப் பாடுபொருள் அதனை வளர்க்கும், வலுவூட்டும் துணைமைப் பாடுபொருள் என இரண்டும் சேர்ந்த ஒன்றையே பொதுவாகப் பாடுபொருள் என்கின்றார் என்பது அறியமுடிகின்றது.

## பாட்டியல்களின் கலம்பக அமைப்பு வரையறை

பாட்டியல் நூல்கள் கலம்பக இலக்கியத்தின் இலக்கண அமைப்பைச் சுட்டுகின்றன. அவற்றை,

"சொல்லிய கலம்பகம் சொல்லில் ஒருபோகு
முதற்கண் வெண்பாக் கலித்துறை புயமே
அம்மானை ஊசல் யமகம் களிமறம்
சித்து காலம் மதங்கி வண்டே
கொண்டல் மருள்சம் பிரதம் வெண்டுறை
தவசு வஞ்சித் துறையே இன்னிசை
புறமேய் அகவல் விருத்தம் எனவரும்
செய்யுட் கலந்துடன் எய்திய அந்தம்
ஆதியாக வரும்என மொழிப" (ப.பா:129)

எனக் கலம்பக இலக்கண அமைப்பாகப் பன்னிரு பாட்டியல் குறிப்பிடுகிறது. இந்நூற்பாவில் கலம்பகத்தின் அமைப்பு இரு நிலைக் கொள்வதாகக் காணப்படுகின்றது.

அ) முதலுறுப்பு

ஆ) துணையுறுப்பு (அ) பொருளுறுப்பு

என இருவகையாக அமையும் என்பதை உணர்த்துகிறது.

இக்கலம்பக இலக்கியத்தைப் பொருத்தமட்டில் முன் கண்ட துணைமைப் பாடுபொருளானது இங்கு இருநிலைகளாக உட்பிரிவு கொள்வது தெளிவாகிறது. இதில் முதலுறுப்பாவது நூலின் முதலில் அமையும் வெண்பா, கலித்துறை, ஒருபோகு என்பவை முதலுறுப்பாகக் குறிப்பிடப்படுகின்றன. இதனை யாப்புறுப்பு என்றும் கூறுவர். இது பாடலின் புறநோக்கு நிலை அமைப்பு உணர்த்துவது) மேலும் புயம், அம்மானை, ஊசல், யமகம், களி,

மறம், சித்து, காலம், மதங்கு, வண்டு, கொண்டல், மருள், சம்பிரதம், தவம் போன்றவை பாடும் பொருள் நோக்கி இவற்றைப் பொருளுறுப்பு என்பர். இவ்விரு அமைப்பும் பல பாவினங்களால் அந்தாதியுடன் அமையப் பாடப்படுவது கலம்பக இலக்கியம் என்று இலக்கண வரையறை கூறப்படுகிறது. ( பொருளுறுப்பு பாட்டின் அக அமைப்பை உணர்த்துவது) ஏனைய பாட்டியல்களும் முதலுறுப்பின் அமைப்பில் ஒத்தே விளக்கம் தருகின்றன. பொருளுறுப்பைப் பொருத்தமட்டில் தன் கால மாற்றத்தின் அடிப்படையில் உறுப்புகளை அதிகப்படுத்தியும், விடுபட்டும் எண்ணிக்கை மாற்றம் கொள்கிறது.

## பாடுபொருளில் வளர்ச்சி

பன்னிரு பாட்டியல் கூறும் பொருளுறுப்பினைப் போன்றே வெண்பாப் பாட்டியல் பண், கைக்கிளை, தழை இரங்கல், கார், தூது என்ற ஆறு புதிய உறுப்புகளைக் ( நூற்பா 32இல்) குறிப்பிடுகிறது. பிரபந்த மரபியலும் தன் பங்கிற்கு ஊர் என்ற ஓர் உறுப்பை மட்டும் (நூற்பா. 4இல்) குறிப்பிடுகின்றது. தொன்னூல் விளக்கமோ காற்று, குளிர் என்ற இரு உறுப்பை (நூற்பா. 258இல்) தான் தோன்றிய காலத்தில் பயன்படுத்தியதைக் குறிப்பிடுகின்றது. இது பாடுபொருளில் (துணையுறுப்பில்) ஏற்பட்ட வளர்ச்சி எனலாம்.

## பா எண்ணிக்கையில் பாடுபொருள்

பாட்டியல்களின் கூற்றுப்படி புயம் முதலாகக் குளிர் ஈறாகப் பொருளுறுப்பு அமையும் என்பதைக் கண்டோம். ஆயினும்,

**"தேவர்க்கும் முனிவர்க்கும் காவல் அரசர்க்கும்**
**நூறு தொன்னூற் றைந்தொண் ணூறே**
**ஒப்பில் எழுபது அமைச்சிய லோர்க்குச்**
**சேப்பிய வணிகர்க் கைம்பது முப்பது**
**வேளா ளர்க்கென விளம்பினர் செய்யுள்"** (ப.பா : 130)

எனப் பாடப்படுவோரும் அவர்களுக்கான பாடல் எண்ணிக்கையும் பற்றி இந்நூற்பாவில் கூறப்பட்டுள்ளது. இங்கு பாடுபொருள் பக்தி எனினும் கடவுளர்க்கு - 100, முனிவர்க்கு - 95 அரசர்க்கு - 90, அமைச்சர்க்கு - 70, வணிகர்க்கு - 50, வேளாளர்க்கு - 30, என பாடலின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது. கடவுள், முனிவர், அரசர், அமைச்சர், வணிகர்,

வேளாளர் போன்றோர்களும் இப்பக்தி இலக்கியக் காலத்தில் பாடுபொருளாக இருந்ததை இங்கு உணர முடிகிறது. இக்கலம்பக இலக்கியத்தின் முதன்மை பாடுபொருளாக இவர்களும் அமையலாம் எனச் சமூக முன்னேற்றத்தை முன்னெடுத்து நிற்பதைக் காணமுடிகிறது. இம்முன்னேற்றத்தில் தடுமாற்றமாகப் பாடப்படுவோர்களின் பாடல் எண்ணிக்கையை நோக்கும் போது இது வளர்ச்சியாயினும் குறைந்த அளவே நடைபெற்றதைத் தெளிவாகச் சுட்டுகிறது. இதன் மூலம் அன்றையச் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களைப் பாட்டியல்களும் கலம்பக இலக்கியங்களும் படம்பிடித்துக் காட்டுவதை உணரமுடிகிறது.

## உறுப்புகளின் வழி சமூக அமைப்பு

இரண்டாம் நிலை அமைப்பான பொருளுறுப்பு அன்றைய சமூக படைப்புச் சூழலில் ஏற்பட்ட புதுமைகளைச் செவ்வனே பதிவு செய்துள்ளது. அதாவது சங்கப் பாடல்களில் வரும் குறம், பாண், தழை, இரங்கல், ஊர் போன்றவற்றோடு நாட்டுப்புற வழக்கில் இருந்த பிச்சியர், கொற்றியர், கீரையர், வளைச்சியர், இடைச்சியர், யோகினியர் போன்றே நாட்டுப்புற வழக்கினையும் இணைத்து ஒரு புதுமையைப் படைத்துள்ளனர். மேற்கண்ட உறுப்புகள் பாட்டியல்களில் குறிப்பிடப்படாமல் கலம்பக ஆசிரியர்களால் கலம்பகங்களில் பின்பற்றப்பட்டுள்ளன. இவ்வுறுப்புகள் மதங்கு (அ) மதங்கியர் என்னும் உறுப்பின் வளர்ச்சியாகப் பின்னோர் படைத்துக் கொண்டுள்ளனர் என்பதும் கலம்பகங்கள் வாயிலாகத் தெளிவாகிறது. தெ.பொ.மீ. அவர்கள் கலம்பக இலக்கியப் பாடுபொருளானது சங்க இலக்கியக் கூறுகள் சிலவும் நாட்டுப்புறக் கூறுகள் சிலவும் இணைவுபெறப் பாடப்பட்டமையால் இதனை நாட்டுப்புறப் புலமை இலக்கியம் என்று குறிப்பிடுவதை மேற்கண்ட கருத்தோடு இவண் நோக்கற்குரிது. (Kalampakam is really attempt combining the Themes and restifications of classical poetry with those of folk poetry)

## உறுப்பும் பொருளும்

படைப்புச் சூழலில் புதுமையாகக் கொள்ளப்பட்ட பொருளுறுப்பான துணைமைப் பாடுபொருள்களாக பிச்சியர், கொற்றியர், கீரையர், வளைச்சியர், இடைச்சியர், யோகினியர் போன்றோரைக் கொண்டதையும் அதன் சமுதாய நோக்கையும் காணலாம்.

| | | |
|---|---|---|
| பிச்சியர் | - | சிவவேடம் அணிந்து பிச்சை எடுக்கும் பெண் துறவியின் எழிலால் அவள் மீது காதல் கொண்ட ஒருவன் கூறும் கூற்றாக இதன் பாடுபொருள் அமைகின்றது. |
| கொற்றியர் | - | இது வைணவப் பெண் துறவியின் அழகால் அவள் மீது காதல் கொண்ட ஒருவன் கூறும் கூற்றாகவே இதன் பாடுபொருளும் அமைகிறது. |

இதில் பிச்சியர் சைவ சமயத்தாரால் போற்றப்படுவர், கொற்றியர் வைணவ சமயத்தவரால் போற்றப்படுவர், இவ்விரு உறுப்பினை எதிரெதிர் சமயத்தார் சமயக் காழ்ப்பின் காரணத்தால் தூற்றலையும் காணமுடிகிறது.

| | | |
|---|---|---|
| கீரையர் | – | தெருவில் கீரை விற்கும் பெண் ஒருத்தியின் அழகால் ஒருவன் கூறும் கூற்றாக வருவது. |
| வளைச்சியர் | - | தெருவில் மீன் விற்கும் பெண்ணின் அழகில் மயங்கிய ஒருவன் கூற்றாக அமைவது. |
| இடைச்சியர் | - | தயிர், மோர், நெய் போன்றவற்றை விற்கும் பெண்ணின் அழகைக் கண்டவனின் கூற்று. |
| யோகினியர் | - | சூலப்பொறியை உடம்பில் தரித்துக் கையில் கபாலத்துடன் தவம் புரியும் யோகினியாகிய பெண் ஒருத்தியின் மீது காதல் கொண்ட ஒருவனின் கூற்றாகவே இதுவும் அமைகிறது. |

மேற்கண்ட இப்பொருளுறுப்பின் பாடுபொருள் நிலையானது சமூகத்தில் உயர்ந்த நிலை மக்களைப் பாடுபொருளாகக் கொண்ட காலத்தில் சாதாரண விளிம்புநிலை மக்களுள் பெண்களைத் துணைமைப் பாடுபொருளாக வைத்துப் பாடியுள்ளதன் வழியாகப் புதுமை செய்துள்ளனர் கலம்பக இயற்றிகள். ஆயினும் அப்பாடு பொருளின் படைப்பு நோக்கமானது இப்பெண் மக்களின் அழகைக் கண்டு காம இச்சை செறிந்த சொற்களாலேயே ஒருவன் காதல் கொள்வதாகக் கூறுவது அன்றைய சமூக நடையியல் கருத்தின் வெளிப்பாடாகவே காணப்படுகிறது.

இதன் காரணமாகத் தூய ஞானநெறிப் பனுவல்கள் இடையிடையே மேற்கண்ட உறுப்புகள் அமைந்தால் தான் உலகத்தாரும் சுவைப்பர் என்று

கு.வெ. பாலசுப்பிரமணியனார் கூறும் கருத்து நோக்கற்குரியது. மேலும் முதற்காலப் பாடுபொருளையே தொடர்ந்து வருமாறு படைப்பது என்பது கற்றலில் தொய்வை ஏற்படுத்துவதாக அமையும். எனவே கற்போரை ஈர்க்கவே இவ்வாறான உறுப்புகள் பாடுபொருள்களாகப் பிற்காலக் கலம்பகப் படைப்பில் பழமை நீக்கிப் புதுமை கொள்ளச் செய்து தன்னை அழகுபடுத்திக் கொண்டன என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

## முடிவுரை

பாடுபொருளானது கவிதையின் நோக்கினை நிறைவேற்றவரும் தலைமைக்கருத்து என்றும் இத்தலைமைக் கருத்தே செய்யுள் இயற்றிட போதாது என்றும் துணைமைக் கருத்துக்களான பொருளுறுப்பும் தேவை என்பதும் உணரப்படுகிறது.

பாடு பொருளானது காலத்திற்கேற்பவும், படைப்பாளிகளுக்கு ஏற்பவும் மாறுபடும் தன்மை கொண்டது. கலம்பக இலக்கியத்தைப் பொருத்தமட்டில் பாடுபொருளானது முதன்மை, துணைமை என்ற இரு நிலைகளில் காணப்படுகிறது.

பொருளுறுப்பு என்னும் துணைமைப் பாடுபொருளில் நாட்டுப்புற வழக்கை ஒட்டிய பாடுபொருள் கற்போர்க்கும் புதுமை உணர்வு ஏற்படும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனினும் இழிந்த நிலையிலேயே இது கையாளப்பட்டுள்ளது என்பது பெறப்படுகிறது. இது அன்றைய சமூகத்தின் நடப்பியலைச் சித்தரிக்கின்றது எனலாம்.

---

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடல்ல மற்றை யவை.

வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா


தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 June 2013 MA/130/2011-2013

Posted at Madurai BPC on 25th of every month


# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்

[ தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது ]

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.



54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## 2013-2014ம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

| முனைவர் மு. மீனா | இரா. குருசாமி |
|---|---|
| முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி | செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி |


| அனுப்புநர், | From |
|---|---|
| **செயலாளர்** | **SECRETARY** |
| மதுரைத் தமிழ்ச் சங்கம் | Madurai Tamilsangam |
| மதுரை – 625 001 | Madurai - 625 001 |
| | TAMILNADU, S. INDIA |

பெறுநர் / To,

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.